மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 12,500 விசைத் தறிகள் இந்த மாநிலத்தில் வைக்க அனுமதி கிடைத்திருக்கிறது. விசைத் தறிகளை வைத்தால் கைத்தறித் தொழில் பாதிக்கப்படுமோ என்று கைத் தறி நெசவில் ஈடுபட்டிருப்பவர்களும், மற்றவர்களும் மறுப்பு தெரி வித்தனர். மற்ற மாநிலங்களில் விசைத் தறிகளுக்கு அதிக இடம் கொடுத்து, விசைத் தறிகளின் மூலம் உற்பத்தி செய்த ஆடை இந்த மாநிலத்தில் வந்து இறக்குமதி ஆகின்றது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு வழி இல்லை. ஆகவே, இங்கிருக்கும் விசைத் தறிகளைப் பயன்படுத்தாமற் போனால், மற்றவர்கள் அவற்றைப் பயன்படுத்தி, அவற்றின் மூலமாக நெய்யும் ஆடைகளை இங்கே கொண்டுவந்து விற்பனை செய்வதன் மூலம் அவர்கள் லாபம் அடையக்கூடும். ஆகவே இங்கேயும் விசைத் தறிகளைப் பயன்படுத்தவேண்டும் என்ற உணர்வும் இருக்கிறது. இப்பொழுது கூட்டுறவுத் துறையில் விசைத் தறிகளைப் பயன் படுத்தலாம். அதிலே வரும் லாபத்தைப் பயன்படுத்தலாம். இன்ன இன்ன ரகங்கள் கைத்தறிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும், இன்ன இன்ன ரகங்கள் விசைத் தறிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று வரையறைகள் செய்வதுபற்றி யோசனை கூறப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது. கூடுமானவரையில் பாதி அளவுக்காவது கூட்டுறவுத் துறை யில் அதை ஒப்படைக்கலாமா என்ற எண்ணம் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு, தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளுக்கு டைரக்டர்களையும், மானேஜர்களையும் நியமிக்கும் உரிமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்த ஆண்டிலே யார் யாருக்கு பதவிக்காலம் முடிந்து விட்டதோ அவர்களையெல்லாம் நீக்கிவிட்டு, அந்த இடங்களில் ஆட்சியிலே இருக்கிற கட்சிக்காரர்களுக்கு, அவர்களுடைய அனுதாபிகளுக்கு கட்சி அங்கத் தினர்களுக்கு மட்டும் இடம் அளித்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையா? கூட்டுறவு இயக்கத்தில் அரசியலைப் புகுத்துவது நியாயமா என்று அறிய விரும்புகிறேன் ?

மு ப. 9-30

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவதிலே உண்மை இல்லை. பழைய முறையிலும் இது கடைப்பிடிக்கப் படவில்லை. இருக்கிற நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து பட்டியலைப் பார்த் தால், குறிப்பிட்ட அரசியல் கட்சியினர் மட்டும் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியவில்லை. எல்லாக்கட்சிக்காரர்களும் அதில் இருக்கிறார்கள். இப்போதிருக்கிற யாரையும் நீக்கிவிட்டுச் செய்கிற முறையில் இல்லை. பதவிக்காலம் முடிந்து விட்ட இடங்களுக்கு புதிய டைரக்டர்களை நியமிக்கும் நிலைமை பரவலாக இருக்கிறது.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, இதற்கு முன்பிருந்த சர்க்கார் கூட்டுறவுத் துறையிலே போட்ட டைரக்டர்கள் அத்தனை பேரும் காங்கிரஸ்காரர்கள் என்பதும், நண்பர் திரு. மலைச்சாமி அவர்கள் சொன்னது போல், " கூட்டுறவு என்றாலே ஒரு கொள்ளைக்கூட்டம் " என்று பேர் வாங்கும் நிலைமையில் இருப்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதைத் திருத்தி நல்லமுறையில் இயங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த வினாவை அனுமதிக்க முடி யாததற்கு வருந்துகிறேன். இந்த வினாவில் குற்றச்சாட்டுக்கள் இருக் கின்றன. வினா நேரத்தில் குற்றச் சாட்டுக்கள் கூற முடியாது. பொது விவாத நேரத்தின்போதுதான் குற்றச்சாட்டுக்கள் கூறமுடியும். அடுத்த வினா. 103.

சாலை அகலப்படுத்தும் திட்டம்

*103 வினா—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப் பாரா—

(அ) திருநெல்வேலி நகரத்தில் பாதையை அகலப்படுத்தும் திட்டத்தின் கீழ் மரங்கள் ஏதேனும் வெட்டப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில் வெட்டப்பட்ட மரங்கள் எவ்வளவு ரூபாய்க்கு ஏலம் போடப்பட்டன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) வெட்டப்பட்ட 17 மரங்கள் திருநெல்வேலி நகராட்சி மன்றத்தாரால் ரூபாய் 3,333-க்கு ஏலம் விடப்பட்டன.

திரு. ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, பாதையை அகலப் படுத்தும் நோக்கத்தோடு பாதையிலுள்ள மரங்களை வெட்டுவதில் தவறு இல்லை. ஆனால் வேறு இடங்களில் அத்துமீறி மரங்கள் வெட்டப்படு வதைத் தடுக்கும் முறையில் கடும் தண்டனை விதிக்கும் சட்டங்கள் இயற்ற அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கனவே அப்படிப்பட்ட சட்டங் கள் இருக்கின்றன.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, in a number of places trees are removed. Whether it is Tirunelveli Town or Madras City does not make much difference. Trees are removed because they obstruct the roads. After the trees are removed, will the Government make a very serious effort to plant trees on the extreme sides of the roads so that for twenty or thirty years there will be very good shade ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மரங்கள் அகற்றப்பட்ட பிறகு, சாலை விரிவுபடுத்தப்பட்டபிறகு, அப்பாலுள்ள இடங்களில் மரங்களை நட லாமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். அப்பாலுள்ள இடங் கள் பெரும்பாலும் கட்டடங்களாகத்தான் இருக்கின்றன. அப்படி கட்ட டங்கள் இல்லாத இடங்களில் மரங்களை நடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் ஆராயும்.

வேலை நிதி ஊதியம் பெறும் பணியாளர்கள்.

*104 வினா—திரு. என். சங்கரய்யா : } திரு. டி. மார்டின் : } மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "Work charged" என்ற பெயரில் உள்ள அரசாங்க ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை தற்பொழுது என்ன ?

(இ) இவர்களது வேலை நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்கான பரிசீலனையை மேற்கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திற்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) துறையின் பல்வேறு பிரிவு களில் பணியாற்றும் வேலை நிதி ஊதியம் பெறுவோரின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

நெடுஞ்சாலை—கிராமப்பணிகள் துறை ..	15,701
பரம்பிக்குளம்-அளியாறு திட்டம்	1,052
பொதுப்பணித்துறை	8,322
மொத்தம் ..	25,075

(இ) வேலை நிதி ஊதியம் பெறும் பணியாளர்களிலே அரசாங்க பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பணியாளர்கள் (Provincialised) முறையான அரசாங்க பணியாளர்களுக்குச் சமமாக பெரும்பாலும் கருதப்படுவதுடன் கீழ்க்கண்ட நன்மைகளையும் பெற உரிமை உள்ளவர் களாவர் :—

ஆண்டுச் சம்பள உயர்வுடன் கூடிய காலக்கிரம சம்பள ஏற்றமுறை, 1936-ம் ஆண்டு திருத்தியமைத்த தொழில் பணியாளர்கள் விடுப்பு விதிகளின் கீழ் விடுப்பு தற்செயல் விடுப்பு, மருத்துவச் சலுகைகள்